**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.42/2020</u>**

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலீல் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 18.11.2022.

**P.W. : 1**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது தகப்பனாரின் உடல்நிலை மற்றும் முதுநிலை காரணமாக எனது தம்பியை அவரோடு வைத்துக் கொண்டு பள்ளி வாசலை பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் தான் பிபிஎல் ஏஜென்சி சென்னையில் தொழில் நடத்துவதற்காக 1ம் பிரதிவாதியை தன்னுடன் அழைத்து சென்று அவருடன் வியாபாரம் நடத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த தொழில் பெயரளவில் மட்டும் தான் பிரதிவாதி பெயரில் இருந்து வந்தது என்றாலும் எனது தகப்பனார் தான் முழுவதும் நடத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிபிஎல் நிறுவனம் சரியான வியாபாரம் இல்லாததால் தயாரிப்பை நிறுத்திவிட்டது என்றும் இதன் காரணமாக சென்னையில் என் தம்பி பெயரில் கூட்டாக நடத்தி வந்த

தொழிலும் முடங்கி போய் நஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னால் பிபிஎல் நிறுவனம் முடப்பட்டது உண்மைதான். இதர விவரங்கள் உண்மையல்ல. 1ம் பிரதிவாதி என் தந்தையுடன் தொழிலை பார்க்கமால் திருச்சிக்கு வந்துவிட்டார். நான் அந்த சமயத்தில் இந்தியாவில் இல்லை. அந்த வியாபாரம் நிறுவனம் மூடப்பட்ட பின்னர் சென்னையில் இருந்து என் தந்தையார் திருச்சிக்கு வந்துவிட்டார். அதன் பிறகு 1ம் பிரதிவாதியை நீ தான் வேண்டும் என்று அழைத்து தன்னோடு வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 2003ல் என் குடும்பம் ஜெ.கே. நகரில் குடியிருந்து வந்தேன். என் தந்தை என்னுடன் ஜெ.கே.நகரில் வந்துவிட்டார். எனது தந்தை என் வீட்டில் சிறிது காலம் தான் இருந்தார் என்றும் அவருக்கு சரியான பராமரிப்பு இல்லாததால் மனம் வெறுத்து போய் எனது சொந்த வீடான எடத்தெரு வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றும் எனக்கு உதவியாக 1ம் பிரதிவாதி தன்னோடு இருக்குமாறு அழைத்து வைத்துக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது இருந்து தொடர்ச்சியாக 1ம் பிரதிவாதி தான் வழக்கு சொத்து வீட்டில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் தினமும் சென்று வருவேன். நான் ஜெ.கே. நகரில் இருந்து பள்ளிவாசல் நிர்வாகத்தை பார்த்துக் கொள்வதற்கு எனக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் தான் மேற்படி வீட்டில் நான் பாகத்தை கேட்கிறேன். எனக்கு பங்கு இருப்பதாலும் நான் கேட்கிறேன். என் தந்தையார் 2003ல் இருந்து 1ம் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் தகப்பனாரை கவனித்துக் கொண்டார் என்றும் நானும் 2ம் பிரதிவாதியும் என் தகப்பானரை கவனித்துக் கொள்ள முன்வரவில்லை என்றும் 1ம் பிரதிவாதியே என் தகப்பனாரை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை

ஏற்றுக்கொள்ளுமாறு என் குடும்பத்தார்கள் அனைவரும் சொன்னோம் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி முழுநேரம் என் அப்பாவை கவனித்துக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் என் அப்பா வாய்மொழியாக 1ம் பிரதிவாதியை அந்த வீட்டை தானமாக ஹீபா வாக கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது உண்மையல்ல. அவ்வாறு என் தந்தை ஹீபாவாக கொடுக்கும் சமயத்தில் நானும் 2ம் பிரதிவாதியும் அனைவரும் அங்கு தான் இருந்தோம் என்றால் சரியல்ல. எடத்தெரு என்பது இருதயபுரம் ஆகியவை அருகருகே உள்ளது. இருதயபுரம் கதவு எண். 1 பி மற்றும் சி அந்த கட்டிடம் எனக்கு சொந்தமான சுயமாக சம்பாதித்த வீடாகும். அந்த முகவரியில் எனக்கு சொந்தமாக 14 வீடுகள் உள்ளன. அது சின்ன சின்ன வீடுகளாக உள்ளது. நான் என் தந்தைக்கு தான் பணத்தை அனுப்பினேன். அவர் தான் அந்த வீட்டை கட்டினார்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது).**